குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கவேண்டுமென்று எதிர்த் தரப்பிலிருந்து கேட்கப்பட்டது. 'பொறுப்பேற்றுக் கொள்ளுகிறேன்' என்று அவர் சொன்னார். அதற்கு ஒரு கமிட்டி அமைத்து அந்தக் கமிட்டியின் முன் அவரை விசாரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்குப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், 'ஒரு கமிட்டி அமைக்கிறேன்' என்று சொன்னார்கள். அந்தக் கமிட்டியின் முன்னால் என்ன சான்றுகளை அளிக்கிறேன் என்று சொன்னார்களோ அந்தச் சான்றுகளை அளித்துவிட்ட பிறகு அந்தக் கமிட்டி எதற்காக? இதில் 'லீகல் ஃப்ளா' என்ன இருக்கிறது? இதை மேலும் வளர்க்க வேண்டாம். இதிலே எந்தவிதமான ஒழுங்கீனமும் இல்லை. இதை இந்த அளவோடு விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

6. தன்னிலை விளக்கம்

பேரவை தாமதமாகக் கூடியதற்கு முதலமைச்சர் விளக்கம்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 9 மணிக்குக் கூடவேண்டிய பேரவை 9¼ மணிக்குக் கூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. நண்பர் விநாயகம் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பி இருக்கிறார்கள். நானும் அதற்காக உள்ளபடியே வருந்துகிறேன். அமைச்சர்கள் இருவர் வந்திருந்தும்கூட அவர்களுக்குக் கேள்விகள் இல்லாத காரணத்தால், கேள்விக்குரிய பதிலைச் சொல்லவேண்டிய அமைச்சர்கள் சற்றுக் காலம்தாழ்ந்து வந்த காரணத்தால் அந்த நிலை ஏற்பட்டது. குறிப்பிட்ட நேரத்தில் வர வேண்டுமென்று அமைச்சர்கள் எவ்வளவோ முயற்சித்தாலும்கூட, காலையிலேயே நூறு பேரையாவது சந்தித்துவிட்டுத்தான் வரவேண்டியிருக்கிறது. சட்ட மன்றத்தில் சந்தித்துச் சில குறைபாடுகளைத் தர வேண்டிய சட்ட மன்ற உறுப்பினர்கள்கூட வீட்டுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களையும் பார்த்துவிட்டு வரவேண்டிய பொறுப்பும், கடமையும் அமைச்சர்களுக்கு இருக்கிறது. இந்தத் தாமதத்திற்கு விளக்கம் தருகிற நேரத்திலே சட்ட மன்றம் நடைபெறுகிறபோது பொதுமக்களும் மற்றவர்களும் அமைச்சர்களிடத்தில் முறையீடுகளைச் சொல்லும் நேரத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்கு வாய்ப்பாகவும் இதை எடுத்துக்கொள்கிறேன். சட்ட மன்றம் 9¼ மணிக்குக் கூடியது என்று பெரிய எழுத்தில் போடக்கூடிய பத்திரிகைகளும் நான் சொன்ன விளக்கத்திற்கும் முக்கிய இடம் தரும் வகையில், பொதுமக்கள் சட்ட மன்றம் நடைபெறக்கூடிய நேரத்தில் அமைச்சர்களைக் காலை நேரத்தில் தொந்தரவு கொடுக்காமல், மாலை நேரங்களில் சந்திப்பதற்கு வழிவகை செய்யும் அளவுக்கு பத்திரிகையாளர்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். இன்று நடைபெற்ற சம்பவத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

7. 1969–70 ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு — தொடர்ச்சி.

கோரிக்கை எண் 12—காவல் துறை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"கோரிக்கை எண் 12—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,92,25,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."